OS 112/2023

வா.சா.1 லட்சுமணகாந்தன் என்கிற சோமசுந்தரம் த/பெ ஆறுமுகம்

குறுக்கு விசாரணை

நாள் 07.11.2024

1. நானும் பிரதிவாதியும் உறவினர் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு பெரியப்பா பெரியம்மா மகன் ஆவார். தாவா 1வது அயிட்ட சொத்திற்கு மட்டும் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2, 3 அயிட்ட சொத்துக்களுக்கு பரிகாரம் எதுவும் கேட்க வில்லை என்றால் சரிதான். நான் 2, 3 அயிட்ட சொத்துக்களை அனுபவிப்பதில் பிரதிவாதி எந்த விதமான தடையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ2 உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அவர்களின் பெயர் இராஜேந்திரன், சாந்தா மற்றும் குப்பன் ஆவார்கள். 3 சாட்சிகளும் எங்கள் ஊரான மொரப்பந்தாங்கலை சேர்ந்தவர்கள் ஆவார்கள். வா.சா.ஆ2 உயில் எழுதப்படும் போது நான் இளவராக இருந்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ2 உயிலில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் அந்த சமயத்தில் எனக்கு தெரியாது தற்போது எனக்கு தெரியும். எனக்கு 25 வயது ஆனபோது வா.சா.ஆ2 உயில் பற்றி எனக்கு தெரியவந்தது. எனக்கு தற்போது வயது 44 ஆகிறது. வா.சா.ஆ2 உயில் பற்றிய விவரங்கள் தெரிந்து 20 வருடங்கள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான்.

4. தாவா 1ம் அயிட்ட சொத்தினை நான் அனுபவித்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் வா.சா.ஆ2 உயிலை தவிர்த்து வேறு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை.

5. என் அம்மாவும் பிரதிவாதியின் அம்மாவும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். என் அம்மாவிற்கும் பிரதிவாதியின் அம்மாவிற்கும் பாகப்பிரிவினை ஒன்று ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு அவர்களுக்குள் ஏற்பட்ட பாகப்பரிவினை பற்றி எனக்கு தெரியும் என்ற விவரத்தினை தான் தாவாவில் என் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6. அவ்வாறு ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் தான் தாவா 1வது அயிட்ட சொத்து பிரதிவாதியின் அம்மாவிற்கு பாத்தியமானது என்றால் இல்லை. தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் அனைத்தும் என் தாத்தாவான நடப்பா என்கிற சின்ன குழந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

7. என் தாத்தாவான நடப்பா என்கிற சின்ன குழந்தைக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்று காட்டுவதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நடப்பா என்கிற சின்ன குழந்தை தனக்கு வாரிசுகள் யாரும் இல்லாததால் என்னை தன் வாரிசாக வளர்த்து வந்தார் என்று தாவாவிலும் முதல் விசாரணை வாக்கு மூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றும் அதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. பிரதிவாதி பெயரில் 04.05.2012 தேதியில் வா.சா.ஆ 4 செட்டில்மென்ட் பத்திரம் முன்னிலைக்கு அவரது அம்மா சீத்தா அம்மாள் 1வது அயிட்ட தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் குறித்து ஆவணம் எழுதி வைத்தார் என்றால் முதலில் எனக்கு தெரியாது தற்போது தான் தெரியும். அவ்வாறு பிரதிவாதி பெயரில் அவரது அம்மா செட்டில்மென்ட் பத்திரம் எழுதி

வைத்த விவரம் எனக்கு 1 அல்லது 1 1/2 ஆண்டிற்கு முன்னர் தான் தெரியவந்தது. செட்டில்மென்ட் பத்திரம் 2012ம் வருடம் எழுதப்பட்டது. செட்டில்மென்ட் பத்திரம் எழுதி 10 வருடங்கள் கழித்து தான் எனக்கு தெரியவந்தது. செட்டில்மென்ட் பத்திரம் எழுதி 12 வருடங்கள் கழித்து தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ5 வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு நான் என் வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ5 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினார். வா.சா.ஆ6 பதில் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் படித்து பார்த்தேன் புரியவில்லை. அந்த பதில் அறிவிப்பிற்கு மறுப்பு தெரிவித்து மறு அறிவிப்பு எதுவும் நான் பிரதிவாதிக்கு அனுப்பினேனா என்றால் இல்லை இந்த வழக்கு தான் தாக்கல் செய்தேன்.

10. 14.12.2002 ல் என் தாத்தா நடப்பா என்கிற சின்ன குழந்தை பிரதிவாதியின் அம்மா சீத்தா அம்மாள் பெயரில் ஒரு உயில் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ4 செட்டில்மென்ட் பத்திரத்தில் 2வது பக்கத்தில் 14.12.2002 ல் சின்ன குழந்தை காலமாகி விட்டதால் அவரது உயில் சாசனத்தின் படி கிடைக்கப்பெற்ற சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதன் படி பார்த்தால் 14.12.2002 தேதியிட்ட உயில் தான் என் தாத்தா நடப்பா என்கிற சின்ன குழந்தை எழுதிய கடைசி உயில் சாசனம் என்றால் சரிதான்.

11. அந்த 14.12.2002 தேதியிட்ட உயிலின் படி தான் பிரதிவாதியின் அம்மா தாவா 1வது அயிட்ட சொத்தினை கைப்பற்றி அதன்பின்னிட்டு அந்த சொத்தினை பிரதிவாதியின் பெயரில் செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தாரா என்றால் எனக்கு தெரியாது.

12. தாவா 1வது அயிட்ட சொத்தின் பட்டா பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். பட்டா பெயர் மாற்றம் செய்யும் சமயத்தில் அந்த சொத்து குறித்த ஆவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்து தான் வருவாய் துறையினர் பட்டா பெயர் மாற்றம் செய்வார்கள் என்றால் சரிதான்.

13. பிரதிவாதியின் தாயாருக்கு பிரதிவாதி மட்டும் தான் ஆண் வாரிசு என்றால் சரிதான். அதனால் தான் பிரதிவாதியின் தயார் தனது மகனான பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை மொரப்பந்தாங்கல் கிராமம் பட்டா எண். 3710 பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

14. பிரதிவாதி வா.சா.ஆ 4 தான செட்டில்மென்ட் பத்திரத்தின் படி தாவா 1வது அயிட்ட சொத்தினை பெற்று அந்த சொத்தினை ஒருவருக்கு அடமானம் மற்றும் ஒருவருக்கு அக்கிரிமெண்ட் போட்டுள்ளார் என்றால் தெரியும். அவ்வாறு அடமானம் மற்றும் அக்கிரிமெண்ட் போட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்பதை தாவாவிலும் முதல் விசாரணை வாக்கு மூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஆனால் அவ்வாறு அடமானம் மற்றும் அக்கிரிமெண்ட் போட்டவர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

15. பிரதிவாதி ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் நான் இதுவரையில் பார்த்ததில்லை ஆனால் கேள்விப்பட்டுள்ளேன். நானும் பிரதிவாதியும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் தான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2 முதல் வா.சா.ஆ 7 வரையான ஆவணங்களுக்கும் தாவா 1வது அயிட்ட சொத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

16. நான் தாவா 1வது அயிட்ட சொத்தை பயிர் வைத்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு பட்டா சிட்டா மற்றும் அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு காலவரையறை சட்டப்படி காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்தவரையில் பிரதிவாதியின் அம்மா பிரதிவாதிக்கு எழுதி வைத்த வா.சா.ஆ4 தான செட்டில்மென்ட் பத்திரப்படி கைப்பற்றி அனுபவித்து வருகிறார் என்றும் அந்த சொத்தில் நான் எந்தவிதமான உரிமையும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ2 உயில் ஆவணத்தின் அடிப்படையில் மட்டும் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு உரிமை விளம்புகை பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ2 உயில் ஆவணப்படி வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றால் அந்த உயிலை மெய்ப்பித்து (Probate) தான் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. முறையான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் தாவா 1வது அயிட்ட சொத்து குறித்து உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

17. நான் பிரதிவாதியின் மீது கொண்ட பொறாமையின் காரணமாக அவரது சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் முறையான ஆவணங்கள் இல்லாமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.